# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2004 - 2017 ජනවාරි මස 27 වැනි සිකුරාදා - 2017.01.27

*2004 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 96 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 100 |


**கவனிக்க.**– கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் சட்டமூலம் 2017, சனவரி மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தரக் கடற்படை

கைவினைஞர்களுக்கான (Artificers) வெற்றிடங்கள்

*1.* இலங்கை நிரந்தரக் கடற்படையில் கைவினைஞர்களுக்கான (Artificers) வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

*2.* பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை நிரந்தரக் கடற்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காகப் பின்வரும் பொதுவான நிபந்தனைகளைப் விண்ணப்பதாரிகள் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

(அ) *தேசிய இனம்.*- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *வயது.*- 2017.02.28 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 24 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) *உயரம்.*- 160 செ. மீ. இற்கு குறையாத உயரம்.

(ஈ) *நிறை.*- 47 கி. கி. இற்கு குறையாத நிறை.

(உ) *மார்பு.*- 76 செ. மீ. இற்கு குறையாத அளவு.

(ஊ) *நிறப் பார்வை.*- STD II.

(எ) *கட்புலக் கூர்மை.*- இடதுகண் 6/6 மற்றும் வலது கண் 6/6 (மூக்குக்கண்ணாடி மற்றும் லென்ஸ் இன்றி).

(ஏ) *குடியியல் நிலை.*- விண்ணப்பதாரிகள் திருமணமாகாத வர்களாக இருத்தல் வேண்டும். பயிற்சியின்போதும், தரத்திற்குரிய தகைமையினைப் பெறும் வரையிலும் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

*3.* **கல்வித் தகைமைகள்.**- (அ) ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவெல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பொறியியல் நிகழ்ச்சித் திட்டத்தில் தேசிய டிப்ளோமா (3 வருடங்கள்) பாடநெறியினைத் தொடர்வதற்கு கீழ்க்குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் இலங்கை கடற்படைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் :

(1) கடல்சார் பொறியியல் பிரிவு (இயந்திர அறை கைவினைஞர்களுக்கானது) ;
(2) மின் பொறியியல் பிரிவு (இலத்திரனியல் கைவினைஞர் களுக்கானது) ;
(3) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் பிரிவு (வானொலி இலத்திரனியல் கைவினைஞர்களுக்கானது) ;
(4) மோட்டார் பொறியியல் (மோட்டார் கைவினைஞர்களுக் கானது) ;
(5) கப்பல் கட்டுமானப் பொறியியல் (கப்பல் கட்டும் கைவினைஞர்களுக்கானது)

தமக்குரிய பிரிவிற்கு விண்ணப்பிக்கத் தகைமையுடையவராக இருப்பதற்கு விண்ணப்பதாரி, க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு கணித பாடத்தில் திறமைச் சித்தியும், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியும் பெற்றிருப்பதுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

**குறிப்பு.**- க. பொ. த. (சா. த.) பரீட்சை எனில் விருப்பத் தெரிவுப் பாடங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

*4.* விளையாட்டுத் துறையில் மிகச் சிறந்த சாதனைகளுக்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

*5. 2* ஆம் மற்றும் *3* ஆம் பந்திகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகத் தேர்விற்கு வரும்போது உயரம், பார்வை மற்றும் நிறை ஆகியன அளவிடப்படும். வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தர நியமத்திற்குக் குறைவான உயரம், பார்வை மற்றும் நிறை என்பவற்றைக் கொண்ட விண்ணப்பதாரிகளும், விதிவிலக்கான திறன்களைக் கொண்டிராத விண்ணப்பதாரிகளும் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். விசேட திறமையினைக் கொண்டிருக்கக்கூடிய அல்லது சேவைக்கான தகுதியினைக் கொண்டிருக்கக்கூடிய எவரேனும் ஒரு பரீட்சார்த்தி, வழங்கப்பட்ட போதிய உயரத்தினைக் கொண்டிராவிடினும் போதிய கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருப்பாராயின் அவர் இலங்கைக் கடற்படைத் தளபதியின் தற்றுணிவின் பேரில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படலாம்.

*6.* **சேவை நிபந்தனைகள் :**

(அ) விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வர்களாக படையில் இணைத்துக்கொள்ளப்படுவதுடன் அடிப்படைப் பயிற்சிக் கற்கைநெறியினையும் தொடர வேண்டும் ;

(ஆ) பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையுடன் கடற்படைத் தளபதியினால் தீர்மானிக்கப்படுகின்ற இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள இடமொன்றில் பயிற்சியினைத் தொடர்வதற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் தயாராக இருத்தல் வேண்டும்;

(இ) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவராக பயிற்சிக் காலப்பகுதி யிலும், அதன் பின்னரும் ஆளணியினர் கடற்படைச் சட்டத்திற்கு உட்படுவர்;

(ஈ) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஒவ்வொருவருக்கும் சீருடைகள், உபகரணங்கள் மற்றும் மருத்துவ வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்;

(உ) பயிற்சிக் காலத்தின்போது ஆசேர்ப்புச் செய்யப்பட்டவர்களுக்கு தங்குமிட வசதியும், பொது உணவு விடுதியிலிருந்து உணவும் வழங்கப்படும் ;

(ஊ) பயிற்சியின்போது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஒருவர் சுயவிருப்பில் தனது பரீட்சார்த்தி தன்மையினை முடிவுறுத்தினால், அதுவரை காலமும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மேற்கொண்ட அனைத்துச் செலவினங்களையும் அவர் மீளச்செலுத்த வேண்டும் ;

(எ) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஒருவர் தனது பயிற்சிக் காலத்தின் எந்தவொரு நேரத்திலும் துர்நடத்தை காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டிற்குட்பட்ட விடயம் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு பொறுப்புக் கூற வேண்டியதன் காரணமாக பொருத்தமற்றவர் என அதிகாரிகளினால் அறிக்கை செய்யப்படுமிடத்து, பயிற்சிக் காலத்தின்போது ஏற்பட்ட அனைத்துச் செலவினங்களையும் இலங்கைக் கடற்படைக்கு மீளச்செலுத்த நேரிடுவதுடன், இது பயனளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக செயற்படும் கடற்படைத் தளபதியுடன் முறி ஒன்றினை மேற்கொள்ளவும் வேண்டும்;

(ஏ) உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சி பெறும் பரீட்சார்த்திகள் முதற்கட்ட நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவதுடன், நேர்முகத் தேர்வில் சித்தி அடைந்தோர் எழுத்து மற்றும் வாய்மொழிப் பரீட்சைகளுக்கும் அழைக்கப்படுவர். அப்பரீட்சைகளில் பெற்றுக்கொண்ட புள்ளிகளையும், வெற்றிடங்களையும் கவனத்திற்கொண்டு அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்;

(ஐ) அனைத்து அலுவலர்களும் எந்தவொரு நேரத்திலும், உலகின் எந்தவொரு பாகத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக நியமிக்கப்படுவதற்கு ஏற்புடையவராவர்;

(ஒ) அனைத்து அலுவலர்களும் கடற்படைச் சட்டத்தினால் நிர்வகிக்கப்படுவர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இலங்கைக் குடியரசின் மொழிக் கொள்கைக்குப் பயனளிக்கும் வகையிலும், குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளின் அமுலாக்கத்திற்காகவும், ஏற்கனவே உருவாக்கப்பட்ட அல்லது இதன் பின்னர் உருவாக்கப்படக்கூடிய ஏதேனும் விதிகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

8. **கொடுப்பனவுகள் மற்றும் படிகள்** :

(அ) ஆரம்பச் சம்பளம்.- 17,684 ரூபா

(ஆ) வாழ்க்கைச் செலவு.- 7,800 ரூபா

(இ) சீருடை சுத்தப்படுத்தலுக்கான படிகள்.- 170 ரூபா

(ஈ) கஷ்டப் பிரதேசங்களுக்கான படிகள் (செயற்பாட்டுப் பகுதிகள்) - அடிப்படைப் பயிற்சியின் பின்னர்

(உ) கஷ்டப் பிரதேசங்களுக்கான படிகள் (செயற்பாடற்ற பகுதிகள்) - அடிப்படைப் பயிற்சியின் பின்னர்

(ஊ) ஏனைய மேலதிக படிகள் : விசேட படி 1,000 ரூபா ;

சீராக்கற் படிகள் 9,822 ரூபா

அண்ணளவாக மொத்தம் - 38,876 ரூபா

**குறிப்பு**.- 2020.01.01 ஆந் திகதியிலிருந்து பயனளிக்கும் வகையில் அலுவலர் ஒருவருக்கான ஆரம்பச் சம்பளம் 30,140 ரூபா என்பதுடன் பின்வருமாறு விளைவுதரும் வகையில் வருடாந்த சம்பளவேற்றங்களும் வழங்கப்படும்:-

01.01.2016 - 176 x 5 - 210 x 19

01.01.2020 - 300 x 5 - 370 x 19

(ஏ) வருடம் ஒன்றிற்கு விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு 3 சோடிகள் (அலுவலர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் தங்கி வாழ்வோருக்கும் ஏற்புடையன).

(ஐ) மாதம் ஒரு முறை கடற்படைத் தளத்திலிருந்து சொந்த இடங்களுக்குப் பிரயாணம் செய்ய விடுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு புகையிரதச் சீட்டுக்களுக்கு மேலதிகமாக ஒரு சோடி சீட்டுக்கள் அல்லது பேருந்து செலவினை மீளச் செலுத்துதல்.

(ஒ) சீருடை மற்றும் துணைப் பொருட்களின் இலவச விநியோகம்.

(ஓ) இலவச மருத்துவ வசதிகள் (அலுவலர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் தங்கி வாழ்வோருக்கும் ஏற்புடையன).

(ஔ) அரசாங்க விடுதி ஒன்றில் வசிக்காத திருமணமான அலுவலர்களுக்கு மாதாந்தம் 1,600 ரூபாவிலிருந்து 4,250 ரூபா வரையான வாடகைப் படிகள்.

(க) திருமணமான அலுவலராயின், வெற்றிடத்திற்கு அமைய மணமானோர் குடிமனை வழங்கப்படும். இதற்கான வாடகை அரச சேவையாளர்களுக்கு ஏற்புடையதைப் போன்று அறவிடப்படும்.

9. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்** :

(அ) விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ அமைப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரியினால் தெளிவான கையெழுத்தில் நிரப்பப்பட வேண்டும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), த. பெ. இல. 593, கடற்படைத் தலைமையகம், கொழும்பு 1 எனும் முகவரிக்கு 2017.02.28 ஆந் திகதியன்று 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்

"கைவினைஞர்களுக்கான (Artificers) ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி மற்றும் உரிய நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைப் பின்பற்றத் தவறிய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலதிக தகவலை www.navy.lk அல்லது 0112215154 என்ற இலக்கத் தொலைபேசி ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) அரச சேவை/ கூட்டுத்தாபனங்கள்/ சபைகள்/ சிவில் தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களது திணைக்கள/ கூட்டுத்தாபன/ சபை/ சிவில் தாபன தலைவரூடாக அனுப்பி வைக்க வேண்டும் என்பதுடன் தெரிவு செய்யப்படுமிடத்து பரீட்சார்த்தியை விடுவிப்பதற்கான சான்றிதழையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுகையில் அல்லது அழைக்கப்படும்போது பரீட்சார்த்திகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுவார்கள் :-

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(2) பிரிவுக்கு அவசியமான கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(3) பாடசாலை விடுகைப்பத்திரம் ;

(4) கிராம அலுவலரின் சான்றிதழ் (விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 6 மாத காலத்தினுள் எடுக்கப்பட்டது) ;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்பப் பயிற்சி மற்றும்/ அல்லது அனுபவம் குறித்த சான்றிதழ்கள் (இருப்பின்) ;

(6) அண்மைக் காலத்தில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ்கள், இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஒன்றும், இரண்டு வருடத்திற்கு மேல் விண்ணப்பதாரியை நன்கு அறிந்த, பொறுப்புவாய்ந்த நபர் ஒருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஒன்றும் ;

(7) விளையாட்டுச் செயற்பாடுகள், படைப் பயிற்சி மற்றும் ஏனைய சான்றிதழ்கள்.

(ஈ) மேற்குறிப்பிட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

(உ) வேறு எந்த ஆவணங்களையோ அல்லது ஆவணங்களின் மூலப் பிரதிகளையோ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் கூடாது.

(ஊ) சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டு அவற்றில் ஏதேனும் தொலைந்தால் அதற்கு இலங்கை கடற்படை பொறுப்பேற்காது.

10. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட கூற்றுக்களில் ஏதேனும் பிழையாகக் குறிப்பிடப்பட்டு அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகுதியிழப்புக்கும், தெரிவின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்துக்கும் விண்ணப்பதாரியை உள்ளாக்கும்.

11. **நேர்முகப் பரீட்சைத் தெரிவுகள் :**

(அ) மேலே குறிப்பிட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்ற பரீட்சார்த்திகள் இலங்கை கடற்படையின் மருத்துவச் சபையினால் நடாத்தப்படுகின்ற அடிப்படை மருத்துவப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இந்த அடிப்படை மருத்துவப் பரீட்சையில் சித்தியடைகின்ற பரீட்சார்த்திகள் மட்டும் உடல் உறுதித் தேர்வில் சித்தியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தகுதி பெறுகின்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஆ) உடல் உறுதித் தேர்வைப் பூர்த்திசெய்வதற்கான தேவைப்பாடுகள் :

| உடற்பயிற்சி | சுற்றுக்கள் | நேரம் (நிமிடங்கள்/ செக்கன்கள்) |
|---|---|---|
| 2,400 மீ. ஓட்டம் | - | 11 நிமிடங்கள் அல்லது அதற்குக் குறைவாக |
| தள்ளுதல் (Push up) | 20 அல்லது அதற்கு மேல் | 2 நிமிடங்கள் |
| இருத்தல் (Sit up) | 15 அல்லது அதற்கு மேல் | 2 நிமிடங்கள் |
| கை வளைத்தல் (Arm Bending) | 7 அல்லது அதற்கு மேல் | - |

(இ) நேர்முகத் தெரிவு நடாத்தப்படும் இடம், நேரம் மற்றும் திகதி பற்றி நேர்முகத் தெரிவுக்கு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இதற்கான பிரயாணச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பதாரி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்போதும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) இறுதி நேர்முகப் பரீட்சைகளுக்குத் தகுதியான பரீட்சார்த்திகள் இலங்கைக் கடற்படை மருத்துவச் சபை ஒன்றின் முன்னால் தோற்றுவதற்கு தேவைப் படுத்தப்படுவார்கள்.

(ஊ) பரீட்சார்த்தி ஒருவரை சிபாரிசு செய்ய விரும்பும் எவரேனும் ஒருவர் நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமே சிபாரிசு செய்ய வேண்டும். பரீட்சார்த்தியைத் தெரிவுசெய்வதில் துணை நிற்கும் அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சி எதுவும் அப்பரீட்சார்த்தியைத் தகுதியற்றவராக்கும்.

(எ) ஆட்சேர்ப்புக்குப் பொருத்தமற்றவராகக் காணப்படுகின்ற பரீட்சார்த்திகள் தொடர்பில் அறிவித்தல் வழங்கப்படாது.

**குறிப்பு**.- இந்த வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப் பட்டுள்ளது. இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்கும்.

ஆர்சி விஜேகுணரத்ன,
WV, RWP & Bar, RSP, VSV, USP, ndc, psn,
துணை கடற்படைத் தளபதி,
கடற்படைக் கட்டளைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கடற்படையின் கைவினைஞர்கள் (Artificers) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம் :----.

(பரம்பரை மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுவதோடு பதிவுமூலம் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்).

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்) :----.

3. முழுப்பெயர் :----.

(தேசிய ஆள் அடையாள அட்டையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

5. நிரந்தர முகவரி :----.

6. தபால் முகவரி :----.

7. பிறந்த திகதி :----.

8. வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.
(2017.02.28 ஆந் திகதியன்று)

9. உயரம் : ---- (செ. மீ.)
மார்பு : ---- (செ. மீ.)
நிறை : ---- (கி. கி.)

10. நிரந்தர முகவரிக்கு அண்மைய பொலிஸ் நிலையம் :----.

11. மாவட்டம் :----.

12. தேர்தல் தொகுதி :----.

13. கிராம அலுவலர் பிரிவு :----.

14. தொலைபேசி இலக்கம் :----.

15. திருமணமானவரா ? :----.

16. பால் :----.

17. கல்வி பயின்ற பாடசாலைகள் :----.

18. கல்வி பயின்ற பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலையின்/ பல்கலைக்கழகத்தின் பெயர் | பரீட்சையின் வகை | பரீட்சை ஆண்டு | சித்தி அடைந்த பாடம் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா. த.) :<br>க. பொ. த. (உ. த.) :<br>வேறு : | | |

19. பாடசாலை/ பல்கலைக்கழகத்திலிருந்து விலகிய பின்னரான தொழில் பற்றிய விபரங்கள் (ஏற்புடையதாயின்) :

| தொழில் தருநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| | முழுப் பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|---|
| தந்தை | | | | |
| தாய் | | | | |

21. இப்பதவிக்கான ஏதேனும் விசேட தகைமை :----.

22. விளையாட்டுக்களில் தற்போதைய சாதனைகள் பற்றிய விபரங்கள் :

(பங்குபற்றிய போட்டிகளின் திகதி/ வருடம் மற்றும் ஏனையவை ஆகியவற்றுடன் பெற்றுக்கொண்ட தரங்கள்/ மட்டங்கள் தொடர்பான விபரங்கள்) :----.

23. பாடசாலையில்/ பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட ஏனைய சாதனைக் குறிப்புகள் (திகதிகள்/ வருடங்களுடன் விபரங்களைக் குறிப்பிடவும்.) : ----.

24. ஆயுதப்படை அல்லது தொண்டர் படையில், பயிலிளவல் பயிற்சிப் படையில் அல்லது இளைஞர் சாரணர் அமைப்பு ஆகியவற்றில் முன்னர் வகித்த ஏதேனும் சேவை :----.

25. இலங்கைக் கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படை அல்லது பொலிஸ் ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களையும் முடிவுகளையும் குறிப்பிடவும் :----.

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றில் தண்டிக்கப்பட்டுள்ளீரா ? அல்லது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக :----.

27. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரச துறை/ சபை/ கூட்டுத்தாபனம் (அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற மத்திய வங்கி, தேசிய வங்கி, பல்கலைக்கழகங்கள், அரசினால் கட்டுப்படுத்தப்படும் கூட்டுக் களஞ்சியக் கம்பனிகள் மற்றும் வேறு) ஆகியவற்றில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டிருப்பின் அத்தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணங்கள்) :----.

28. நடத்தைச் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

29. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதிமொழி :

மேற்படி வினாக்களுக்குக் கொடுக்கப்பட்ட பதில்கள் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையும் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கைவினைஞர்கள் (Artificers) பிரிவுக்கு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தொடர்பாக பிரயோகிக்கப்படும் விதிகளையும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகளையும் வாசித்து புரிந்து கொண்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

1-816

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்

**உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் - கல்வி ஆண்டு 2017**

2016 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோரிடமிந்து இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தால் (SLIATE) நடாத்தப்படுகின்ற உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிக்கும் முறை**.- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட, ஆங்கிலத்தில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை ஹைட் பார்க் வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளை அல்லது ஏதேனும் மக்கள் வங்கியில் கணக்கு இல. 025-2-001-1-3397613 இற்கு 500 ரூபா (ஐநூறு) பற்று வைத்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் இணைத்து பதிவுத்தபாலில் உரிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்/ பிரிவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். “விண்ணப்பிக்கும் பாடநெறியை” கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிறுவகங்களுக்கு விண்ணப்பிக்க

விரும்பும் விண்ணப்பதாரிகள், அவர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ரூபா 500 பெறுமதியான தனித்தனி பற்றுச்சீட்டை இணைத்து தனித்தனி விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்தை தவிர்ந்த ஏனைய கணக்கு இலக்கங்களுக்கு பற்று வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2017.02.28 ஆந் திகதிக்குப் பின்னராக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பிரிவு 'ஆ' இல் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்/ பிரிவுகளினால் நடாத்தப்படும் பாடநெறிகளும் முகவரிகளும் தரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் தமது தகைமைகளுக்கேற்ப பிரிவு "அ" வில் தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தமக்கான கல்வி நிகழ்ச்சித்திட்ட பாடநெறிகளை தெரிவுசெய்தல் வேண்டும்.

**விரிவுரைகளின் வகை :**

| | | |
|---|---|---|
| பகல்/முழுநேர பாடநெறிகள் | : | வேலைநாட்கள், பகல் நேரம் |
| பகுதி நேர பாடநெறிகள் | : | வார இறுதி நாட்கள், பகல் நேரம் |
| மொழிமூலம் | : | ஆங்கிலம் |

உரிய துறையில் கடமையாற்றுவோருக்கே பகுதி நேர பாடநெறிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**பாடநெறிக்கான கட்டணங்கள்**.- முழு நேர (Full Time) பாடநெறிகளுக்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது. பகுதிநேர (Part Time) பாடநெறிகளுக்கான தவணைக் கட்டணங்கள் (semester) பின்வருமாறு :

கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) ரூபா 5,000.
ஆங்கிலம் உயர் தேசிய டிப்ளோமா (HND in English) ரூபா 8,000.
தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDIT) ரூபா 12,000.

**நேர்முகப் பரீட்சை**.- தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தேர்விற்காக எழுத்துமூலப் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும் அல்லது ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். மாணவர்களின் தேர்வுகள், க. பொ. த. (உ./த.) பரீட்சை மொத்தப் புள்ளிகள் மற்றும் " Z " - புள்ளிகள் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றும் இடம், நேரம், திகதி மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கத் தேவையான ஆவணங்கள் பற்றி அறிவிக்கப்படும். மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாதபோது பாடநெறி பதிவின்போது மூல ஆவணங்களை சமர்ப்பிக்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் சான்றுப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தங்குமிட வசதிகள்**.- பெண்களுக்கான வரையறை செய்யப்பட்ட தங்குமிட வசதிகள் கம்பஹா/தெஹிவளை உ. தொ. நுட்பக் கல்லூரிகளிலும், ஆண்/பெண் இருபாலாருக்குமான தங்குமிட வசதிகள் கொழும்பு/ அம்பாறை ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ்வசதி முழுநேர பாடநெறி மாணவர்களுக்கு மாத்திரமேயாகும்.

பகுதி "அ"

1.1 **கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஏ" (முழுநேரம்) - 4 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் வணிக புள்ளிவிபரவியல், இணைந்த கணிதம் அல்லது கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இப்பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களிலே திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணித பாடத்தில் திறமை சித்தி பெற்றிருப்பின் மேற்கூறிய பாடங்களில் ஏதேனுமொன்றின் திறமைச் சித்திக்கு மாற்றீடாக கருத்தில் கொள்ளப்படும்.

அல்லது

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**1.2 கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஏ" (பகுதிநேரம்) - 4 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ.த.) பழைய பாடத்திட்டமெனில் நான்கு பாடங்களிலும், புதிய பாடத்திட்டமெனில் மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல்;

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வியாபாரக் கல்வி தேசிய சான்றிதழை (கணக்கியல்) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது கணக்கீட்டு தேசிய சான்றிதழை வெற்றிகரமாய் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

**மு. குறிப்பு**.- விண்ணப்பதாரி அரசாங்க நிறுவகம்/ தொழிற்பயிற்சி ஸ்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இத்துறையில் சேவையாற்றுதல் வேண்டும்.

பின்வரும் தகைமை கொண்டுள்ளோர் இப்பாடநெறியின் முதலாம் ஆண்டிடல் விலக்களிக்கப்படுவர். இரண்டாம் ஆண்டுக்கு சேர்த்துக்கொள்கையில் அதற்கான தகுதியும் வெற்றிடமும் இருப்பின் நிபந்தனையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(i) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வியாபார கல்வி/வியாபார நிதி தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

(ii) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட வியாபார நிருவாகம்/ வியாபார நிதி/ முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தால் நடாத்தப்பட்ட வர்த்தக உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் இரண்டாம் ஆண்டைப் பூர்த்திசெய்திருத்தல்.

(iv) உரிய துறையில் பல்லைக்கழக பட்டம் பெற்றிருத்தல் (கணக்கியல்/ வியாபார நிருவாகம்/ வர்த்தகமானி (பிகொம்) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/மனிதவள முகாமைத்துவம்/வியாபார நிதி/வியாபார பொருளியல்.

(v) "ஜசீஏஎஸ்எல்" பாகம் I மற்றும் II பூர்த்திசெய்திருத்தல்.

(vi) "சீஜஎம்ஏ" பாகம் I மற்றும் II பூர்த்திசெய்திருத்தல்.

(vii) "ஏஏரீ" பூர்த்திசெய்திருத்தல்.

(viii) "சீஎம்ஏ" பூர்த்திசெய்திருத்தல்.

**2. வியாபார நிர்வாகம் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிபிஏ" (முழுநேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் துறையில் எல்லாப் பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் (கணிதம்/விஞ்ஞானம்/வர்த்தகம்).

அல்லது

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**3. வியாபார நிதி உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிபிஎவ்" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதம் அல்லது வர்த்தகத் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல்

அல்லது

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம்/ஆங்கில பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**4. கட்டிட சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிபீஎஸ்ஈ" (முழுநேரம்) - 3 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் கணிதத் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**5. நுகர்வோர் விஞ்ஞானம் மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிசீஎஸ்பிரி" (முழுநேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும் (மனையியல் கல்வி ஒரு பாடமாக உள்ளடக்க வேண்டும்).

அத்துடன்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், ஆங்கிலப் பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**6. பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா - (சிவில்) - (முழுநேரம்) - 3 1/2 வருடங்கள்**
**பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா - (மின்சாரம்/இலத்திரனியல்) - (முழுநேரம்) 3 1/2 வருடங்கள்**
**பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா - (இயந்திரவியல்) - (முழுநேரம்) 3 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் கணிதத் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல்.

மற்றும்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**7. ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா "எச்என்டி ஆங்கிலம்" (முழு நேரம்) - (பகுதி நேரம்) - 2 1/2வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை மற்றும் தொழில்நுட்பம் விரும்பத்தக்கது) அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) கல்வியியல் கல்லூரியினால் வழங்கப்பட்ட டிப்ளோமா அல்லது ஆங்கில நிபுணத்துவ ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்

அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்திபெற்றிருப்பதுடன் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கல்விக்கான ஆங்கில தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல்.

**8. உணவுத் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஎவ்ரி" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் விஞ்ஞான அல்லது கணிதத் துறையில் சித்தி பெற்றிருத்தல்

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**9. தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஐரி" (முழுநேரம்) - 2 1/2 வருடங்கள் (பகுதி நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் துறையில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை (தகவல் தொழில்நுட்ப பாடம் உள்ளடங்கலாக),

மற்றும்

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம், ஆங்கிலப் பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**10. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஎம்" (முழு நேரம்) - 3 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல். (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை மற்றும் தொழில்நுட்பம் விரும்பத்தக்கது,)

அல்லது

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் வியாபாரக் கல்வி (பொது நிருவாகம்/ சந்தைப்படுத்தல்) தேசிய சான்றிதழ் அல்லது கணக்கீட்டு தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

*11.* **பரிமாண நிலஅளவை உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் "எச்என்டிகியூஎஸ்" (முழு நேரம்) - *2 1/2* வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதத் துறையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் ;

அத்துடன்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்

*12.* **தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா- "எச்என்டிரி" (விவசாயம்) - (முழு நேரம்) - *3* வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விஞ்ஞான துறையில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். (இரண்டு பாடங்கள் பின்வருவனவற்றுள் எதையேனும் உள்ளடக்குதல் வேண்டும். இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், உயிரியல் மற்றும் பௌதிகவியல்)

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

*13.* **உல்லாச மற்றும் உபசரணை முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா- "எச்என்டிரிஎச்எம்" (முழு நேரம்) - *3* வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல். (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை மற்றும் தொழில்நுட்பவியல்)

அல்லது

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் வியாபாரக் கல்வி (பொது நிர்வாகம்/ சந்தைப்படுத்தல்) தேசிய சான்றிதழ் அல்லது கணக்கீட்டு தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல்

மற்றும்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :

* பகுதிநேர விண்ணப்பதாரிகள் உரிய துறைக்கான தொழிலில் ஈடுபட்டிருத்தல் வேண்டும் ;
* முழுநேர பாடநெறிகளுக்கு குறைந்தபட்சம் ஆறு மாத கால பயிற்சிப் பாடநெறி உள்ளடக்கப்பட்டுள்ளது ;
* பகுதிநேர பாடநெறிகளுக்கு குறைந்தபட்சம் ஆறு மாத கால வேலைத்திட்ட அறிக்கையொன்று முன்வைக்கப்படல் வேண்டும்.

**பிரிவு 'ஆ'**

உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்கள்/ உ. தொ. நி. பிரிவுகளின் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் நடைபெறும் பாடநெறிகள்:-

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 01 | ஹார்டி உயர் தொழில் நுட்பவியல் நிறுவகம், அம்பாறை | இங்கினியாகலை வீதி, அம்பாறை | 063-2222056, 063-2223035 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ(ப. நே.), எச்என்டிஎம், எச்என் டிஐரி(மு. நே.), எச் என்டிரி (விவசாயம்) என்டி ஆங்கிலத்தில் (மு. நே.) எச்என்டி ஆங்கிலத்தில் (ப. நே.) எச்என்டிரிஎச்எம் |
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், அநுராதபுரம் | அக்கற III, அநுலா மாவத்தை, பண்டுலுகம அநுராதபுரம் | 025-2234417 | எச்என்டிஏ(மு. நே.), எச்என்டிஏ(ப. நே.), எச்என்டி ஆங்கிலத்தில் (மு. நே.) எச்என்டி ஆங்கிலத்தில் (ப. நே.), எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐ (ப. நே.), எச்எம்டிரிஎச்எம் |
| 03 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், பதுளை | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | 055-2230218, 055-2223818 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம், எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டி ஆங்கிலத்தில் (மு. நே.), எச்என்டி, ஆங்கிலத்தில் (ப. நே.) எச்என்டிரீஎச்எம் |
| 04 | உயர் தொழில்நுட்ப நிறுவகப் பிரிவு, மட்டக்களப்பு | "பல்நோக்கு கட்டிடம்", கோவில்குளம் கிழக்கு, ஆரயம்பதி | 065-2247519 | எச்என்டிஏ(மு. நே.) எச்என்டிஏ (ப. நே.), எச்என்டி ஆங்கிலத்தில் (மு. நே.) எச்என்டி ஆங்கிலத்தில் (ப. நே.), எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டிரிஎச்எம் |
| 05 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், கொழும்பு | இல. 42, ரொற்றிகோ இடம், கொழும்பு 15 | 011-2521282 011-2521152 | எச்என்டிஈ (சிவில், இயந்திரவியல், மின்னியல்) என்டிகியூஎஸ், எச்என்டிபிஎஸ்ஈ |
| 06 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், தெஹிவளை | இல. 51, வைத்தியா வீதி, தெஹிவளை | 011-2738349 | எச்என்டிஏ(மு. நே.), எச்என்டிஏ(ப. நே.), எச்என்டிஎம், எச்என்டிபிஏ எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டி ஆங்கிலத்தில் (மு. நே.), எச்என்டி ஆங்கிலத்தில் (ப. நே.), எச்என்டிபிஎவ், |

| *குறியீட்டு இல.* | *உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு* | *முகவரிகள்* | *தொலைபேசி இல.* | *நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள்* |
|---|---|---|---|---|
| | | | | எச்என்டிரிஎச்எம் |
| 07 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், காலி | ஸ்ரீ தம்ம மாவத்தை, லபுதுவ, அக்மீமன | 091-2246179 | எச்என்டிஈ (சிவில், இயந்திரவியல், மின்னியல்), எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப.நே.), எச்என்டிஎம், எச்என்டி ரிஎச்எம், எச்என்டிபிஏ, எச்என்டி ஐரி(மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டிரி (விவசாயம்), ஆங்கிலத்தில் எச்என்டி, (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி(ப. நே.), எச்என்டிகியூஎஸ் |
| 08 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், கம்பஹா | நைவல, எஸ்ஸெல்ல, வெயாங்கொடை | 033-2287519, 033-2292544 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ(ப. நே.), எச்என்டிஐரி(மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டிரி (விவசாயம்), எச்என்டிஎவ்ரி, சீஎஸ்பீரி |
| 09 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், யாழ்ப்பாணம் | இல. 665/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595 021-2229803 | எச்என்டிஈ (சிவில் மற்றும் மின்னியல்), எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம், எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.), எச்என் டிரிஎச்எம் |
| 10 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல மாவத்தை, கண்டி | 081-2226644, | எச்என்டிஏ(மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம், எச்என் டிபிஏ, எச்என்டிஐரி (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி, (மு. நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே.), எச்என்டிரி எச்எம் (மு. நே.) |
| 11 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகம், கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297 035-2221713 | எச்என்டிஏ(மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஐரி(மு. நே.) எச்என்டி ஆங்கிலத்தில் (மு. நே.), எச்என்டி ஆங்கிலத்தில் (ப. நே.) |

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், குருநாகல் | இல. 22/1, வில்கொட வீதி, குருநாகல் | 037-2224911, 037-2229583 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம் (மு. நே.), எச்என்டிஜரி (மு. நே.), எச்என்டிஜரி (ப. நே.), எச்என்டி ஆங்கிலம் (மு. நே.), எச்என்டி ஆங்கிலம் (ப. நே.), எச்என்டிரீஎச்எம் |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, மன்னார் | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், இல. 320, 'ஜனவத்து பியச', ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 | 011-2691307 | எச்என்டி ஆங்கிலம் (மு. நே.), எச்என்டி ரிஎச்எம், எச்என்டிபீஏ |
| 14 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு,மொனறாகல | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், இல. 320, 'ஜனவத்து பியச', ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 | 011-2691307 | எச்என்டி ஆங்கிலம் (மு. நே.), எச்என்டி ரிஎச்எம், எச்என்டிபீஏ |
| 15 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, நாவலப்பிட்டி | பழைய நகரசபை கட்டிடம், நாவலப்பிட்டி | 054-2050634 | எச்என்டிரிஎச்எம், எச்என்டி ஆங்கிலம் (மு. நே.), எச்என்டி ஆங்கிலம் (ப. நே.) எச்என்டிஎம் |
| 16 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, இரத்தினபுரி | புதிய நகர், இரத்தினபுரி | 045-2231492 045-2231493 | எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஜரி (மு. நே.), எச்என்டிஜரி (ப. நே.), எச்என்டி ஆங்கிலம் (மு. நே.), எச்என்டி ஆங்கிலம் (ப. நே.) |
| 17 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு சம்மாந்துறை | பிரதான வீதி, சம்மாந்துறை | 067-2261304 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டி ஆங்கிலம் (மு. நே.) எச்என்டீ ஆங்கிலம் (ப. நே.), எச்என்டிஜரி (மு. நே.) |
| 18 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, தங்காலை | யாயவத்தை, நெட்டொல்பிட்டிய, தங்காலை | 047-2241845, 047-2241846 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஜரீ (மு.நே.), எச்என்டி ஆங்கிலம் (மு. நே.), எச்என்டி ஆங்கிலம் (ப. நே.) |

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 19 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, திருகோணமலை | கிண்ணியா வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-2223232<br>026-2050617 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டி ஆங்கிலம் (மு. நே.), எச்என்டி ஆங்கிலம் (ப. நே.), எச்என்டிரிஎச்எம் |
| 20 | உயர் தொழில்நுட்ப வியல் நிறுவகப் பிரிவு வவுனியா | ஏ9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா | 024-2052733 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டி ஆங்கிலம் (மு. நே.), எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டி ஆங்கிலம் (ப. நே.) |

**குறிப்பு :**

1. பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா, கட்டிட சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா, பரிமாண நிலஅளவை உயர் தேசிய டிப்ளோமா (முழு நேர) பாடநெறிகளுக்கான விண்ணப்பதாரிகள் வகுப்புகளில் வேலை நாட்களில் கலந்து கொள்வதுடன் அவசியம் ஏற்படும் வேளைகளில் வார இறுதி நாட்களிலும் பங்குபற்றுதல் வேண்டும்.

2. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (முழு நேரம்) பாடநெறிக்கான விரிவுரைகள் முதலாம், இரண்டாம் வருடம் வேலை நாட்களில் பகல் வேளையிலும் மூன்றாம், நான்காம் வருடம் வார இறுதி நாட்களிலும் இடம்பெறும்.

3. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (முழு நேரம்) பாடநெறிக்கான விரிவுரைகள் முதலாம், இரண்டாம் வருடம் வேலை நாட்களில் பகல் வேளையிலும் மூன்றாம் வருடம் வார இறுதி நாட்களிலும் இடம்பெறும்.

4. க. பொ. த. (உ. த.) புதிய பாடத்திட்டத்தில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் பொது வினாப்பத்திரத்தில் கட்டாயம் சித்தி பெற்றிருத்தல் அவசியம்.

5. ஒவ்வொரு கல்வி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒவ்வொரு தேர்விற்கான தேர்வுப் பிரமாணமாக க. பொ. த. (உ. த.) இன் Z புள்ளிகள் கருத்திற்கொள்ளப்படும்.

6. பாடநெறிகளுக்கான பூரண தகைமை உள்ளோர் மீது முதற்கவனம் செலுத்தப்படும்.

7. 23 வயதிற்குட்பட்டோருக்கு முழுநேர பாடநெறிக்கான முன்னுரிமை வழங்கப்படும்.

8. உயர் தொழில்நுட்ப நிறுவகம்/ நிறுவகப் பிரிவு ஒன்றினால் நடாத்தப்படும் பாடநெறி ஒன்றுக்கு குறைந்தபட்சம் 50 விண்ணப்பதாரிகள் இருத்தல் வேண்டும்.

9. விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எதிர்பார்த்ததைவிட கூடுதலாக இருப்பின் நிறுவக வாரியாக விவேகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும்.

10. குறிப்பிட்ட உயர் தொழில்நுட்ப நிறுவகம் அல்லது உ. தொ. நி. பிரிவில் முழுநேர பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட பின்னர், அம்மாணவர்கள் எக்காரணம் கொண்டும் வேறேதேனும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்கு மாற்றப்பட மாட்டார்கள்.

11. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் பதிவுசெய்யும் மாணவர் ஒருவருக்கு, பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு தமது பதிவினை விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் இரத்துச்செய்துகொள்ள இந்நிறுவகம் அனுமதிக்கும்.

2017 ஆம் ஆண்டு கல்வி ஆண்டுக்கான ஆட்சேர்ப்பு சம்பந்தமான இறுதித் தீர்மானம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் என்பதை கருத்திற்கொள்க.

மேலதிக விபரங்களுக்கு எமது இணையத்தளத்தை நாடவும் :

இணையத்தளம் : www.sliate.ac.lk
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2017

கலாநிதி டபிள்யூ. ஹிலரி ஈ சில்வா,
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்.

*Office use only –* | *Course Number …………*

***SPECIMEN APPLICATION FORM***

**SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION**

**Application form for Admission to Higher National Diploma Courses in year 2017**

**Name the Courses in the Order of preference**

1. ............................................................................
2. ............................................................................
3. ............................................................................

1. Name with Initials :——————.
2. Name/Names denoted by Initials :——————.
3. Postal Address :——————.
4. Date of Birth :

   Year :—————, Month :—————, Date :————.

   Age (as at 28.02.2017) :

   Years :————, Months :————, Days :—————.
5. National Identity Card No. :——————.
6. Email Address :——————.
7. Sex :——————.
8. Administrative District :——————.

   Contact Phone Number :——————.

9. (i) Results of G.C.E (A/L) Examination :

Year:——————. Index No. :——————. Medium :——————.

| *Subjects* | *Grade* |
|---|---|
| 1. …………………… | …………… |
| 2. …………………… | …………… |
| 3. …………………… | …………… |

Common General Paper : (Pass/Fail)

Aggregate/Z-Score of the above Examination :——————.

(ii) Results of G.C.E (Ordinary Level) Examination :-

Year:——————. Index No. :——————. Medium :——————.

| *Subjects* | *Grade* | *Subjects* | *Grade* |
|---|---|---|---|
| 1. …………………… | …………… | 6. …………………… | …………… |
| 2. …………………… | …………… | 7. …………………… | …………… |
| 3. …………………… | …………… | 8. …………………… | …………… |
| 4. …………………… | …………… | 9. …………………… | …………… |
| 5. …………………… | …………… | 10. …………………… | …………… |

10. Highest Qualification in English as a subject :——————.

11. Only for part time Courses :

Details of Present Employment :

Post :——————.

E.P.F. Number :——————.

Place of work and Address :——————.

Date of Appointment :——————.

I do hereby declare that I am not following any other full time course of study in any other state institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full time course at any other state institution. I do hereby certify that the information furnished here is true and accurate to the best of my knowledge.

——————,
Signature of Applicant.

Date :——————.

(The bank receipt for Rs.500. Payable to SLIATE should be affixed below.)

**Affix the Bank Slip for the amount of Rs. 500 credited to the SLIATE account in the Peoples Bank**

| | | |
|---|---|---|
| Name of the Bank | : | People's Bank |
| Branch | : | Hyde Park Corner Branch, Colombo 02 |
| Account No. | : | 025-2-001-1-3397613 |

01-838

## நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

நீர்ப்பாசனத் திணைக்களம்

### நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமைப் பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 **ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவி :**

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | ஆட்சேர்க்கும் தரம் |
|---|---|---|---|
| 1 | படவரைஞர்கள் (Draftsman) | 41 | பயிற்சித் தரத்தில் (ஒரு வருட பயிற்சிக்காக) |
| 2 | துளையிடல் உதவியாளர்கள் (Drilling Assistant) | 01 | (பயிற்சித் தரத்தில் இரு வருட பயிற்சிக்காக) |
| 3. | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) (Research Assistant-Gen) | 03 | |
| 4. | சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர் (Civil Eng. Material Surveyor) | 05 | |
| 5. | மண் பட வரைவியலாளர் (Soil Cartographer) | 01 | |
| 6. | நீரியல் உதவியாளர்கள் (Hydrologic Assistant) | 04 | |
| 7. | நீரியல் வெளிக்கள உதவியாளர்கள் (Hydrology Field Assistant) | 02 | |
| 8. | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்) [Research Assistant (Engineering materials)] | 04 | |
| 9 | மண் வள ஆய்வாளர்கள் (Soil Surveyor) | 02 | |
| 10 | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்) [Research Assistant (Hydraulics)] | 01 | |
| 11 | இயந்திரவியல் மேற்பார்வையாளர் (Mechanical foreman) | 06 | III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப் படும் இருப்பினும் ஆட்சேர்க்கப் பட்டதுடன் முதல் 6 மாதங்களுக்குள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இயந்திரவியல் வேலைத்தளத்தில் சேவையுடன் பயிற்சியளிக்கப்படும். |

*1.2* பதவிக்குரிய கடமைகளின் தன்மை :

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வழங்கப்படும் செயற்பாடுகள்* |
|---|---|---|
| *1.* | பட வரைஞர்கள் (Draftsman) | (1) பொறியியல் உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் திட்ட வரைபடம், அடிப்படை வழியலகு (Basic Parameters) பட வரைபுகள் குறிப்பு மூலம் விபரமான பட வரைபுகளைத் தயாரித்தல்/ பரிசீலித்தல் : நில அளவை மற்றும் (contour line maps) மூலம் குறுக்கு முகமாக, நெடுக்கு வெட்டுமுக வரைபடங்களைத் தயாரித்தல்/ பரீட்சித்தல், நீர்ப்பாசனத் திட்டங்களிலுள்ள காணித்துண்டுகள் பற்றிய வரைபடங்கள், காணிகளைக் கையகப்படுத்தும் பட வரைபுகள் பராமரித்தல் செயற்படுத்தல் மற்றும் தயாரித்தல்/ பரிசீலித்தல்.<br><br>(2) அளவீட்டுக் கணிப்பு.- விலை/ விலைபற்றுச்சீட்டுத் தயாரித்தல்/ பரிசீலித்தல்.<br><br>(3) வேலை மதிப்பீடு பரிசீலனை செய்தல்.- வேலை மதிப்பீட்டுக்கிணங்க பெறுகைகளைச் செயற்படுத்துவதற்கு உரிய படிவங்கள், அட்டவணையைத் தயாரித்தல்/ பரீட்சித்தல் வேலைக்காக கொடுப்பனவு செய்வதற்கு உரிய அளவைப் புத்தகங்கள், கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு, இறுதிக் கொடுப்பனவு அறிக்கை மற்றும் வரைபடங்கள் என்பவற்றைப் பரிசீலனை செய்தல்.<br><br>(4) நீர்ப்பாசனத் திட்டங்களுக்குரிய தொழில்நுட்பச் செயற்பாடு மற்றும் முறையான தரவுகள் பற்றிய அட்டவணையைப் பராமரித்தல்.- முன்னேற்ற அறிக்கை/ குறிப்பு தயாரித்தல்/ பரிசீலனை செய்தல்.<br><br>(5) வரைபுகள், திட்ட வரைபுகள் மற்றும் ஏனைய படவரைபு ஆவணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பவற்றைப் பாதுகாத்தலும் பராமரித்தலும்<br><br>நிறைவேற்று/ முகாமைத்துவ அதிகாரிகளால் வழங்கப்படும் ஏனைய படவரைஞருக்கான கடமைகள் |
| *2.* | துளையிடல் உதவியாளர்கள் (Drilling Assistant) | * பெரிய மற்றும் நடுத்தர அளவிலான நிர்மாணத்திற்காக தரையின் பலம், தரைக்கீழ் நீர்க்கசிவு ஆகியவற்றைப் பரிசீலித்தல்.<br>* பாரிய நிர்மாணத்திற்கான அத்திவாரத்திற்காக பல்வேறு விதமான ஆழமான மட்டங்களிலிருந்து பாறைகள் மற்றும் மண் படிமங்களின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல்.<br>* பாறைப் படலங்களில் ஏற்படும் கசிவுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் வலுவூட்டுதல்.<br>* நிறைவடைந்துள்ள நிர்மாணங்களில் உள்ள கசிவுகளைச் சீமெந்து மற்றும் இரசாயனப் பொருட்களைச் செலுத்தி கொங்கிரீட் படலங்களை இடுவதன் மூலம் பலப்படுத்தல்.<br>* மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கான அறிக்கையினை முன்வைத்தல்.<br><br>மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களுக்காகத் தேவைப்படும் துளையிடல் இயந்திரங்கள், நீர்ப்பம்பி மற்றும் ஏனைய உபகரணங்களையும் அவைக்குரிய டீசல் மற்றும் பெற்றோல் இயந்திரங்களையும் செயற்படுத்தல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல். |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| 3. | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) (Research Assistant - General) | (1) தற்போது இடம்பெறும் மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்த எதிர்பார்க்கப்படும் நீர்ப்பாசன மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் சாத்திய வள ஆய்வு நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் மண் மற்றும் நீர் மாதிரிகளில் பௌதிக மற்றும் இரசாயன குணவியல்புகளைப் பகுப்பாய்வு செய்தல்.<br><br>(2) கரைசல் மற்றும் அதற்குரிய கலவை என்பவற்றை முறையாகத் தயாரித்தல் நாளாந்த பகுப்பாய்வு விடயங்களில் பயன்படுத்தப்படும் நவீன நுண்ணிய இலத்திரனவியல் மற்றும் இயந்திர உபகரணங்களை முறையாக பாவித்தல், பகுப்பாய்வு மூலம் பெறப்பட்ட தரவுகளைச் சீரமைத்தல். |
| 4. | சிவில் பொறியியல் மூலப் பொருள் ஆய்வாளர் (Civil Engineering Material Surveyor) | * நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்தல், அத்துறையில் பொறியியல் மூலப்பொருளுக்காக தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் (மண் மற்றும் கொங்கிறீட் மூலப்பொருட்களின் குணவியல்புகள் மற்றும் அதன் பலம் பற்றிய ஆய்வில்) ஈடுபடுதல் மற்றும் அத்தரத்தினைச் சான்றுப்படுத்தல்.<br><br>* அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் கோரிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்வதில் ஈடுபடல். |
| 5. | மண் படவரைவியலாளர் (Soil Cartographer) | * மண் பரிசீலனை மற்றும் மண் படவரைபினை ஒன்றிணைத்தலும் தொகுத்தலும்<br><br>* கொடுக்கப்படும் தரவுகளுக்கிணங்க தேசப்படங்களை வரைதலும் வர்ணமிடுதலும்<br><br>* நகல் மண் படவரைபு (Draft Soil Map) மற்றும் இறுதி மண் படவரைபு (Final Soil Map) என்பவற்றைத் தயாரித்தல்<br><br>* Aerial photograph இனை உபயோகித்து காணிகளைத் தரப்படுத்தல், அப்பிரதேசத்தின் மண் படவரைபு, கணக்கிடுதல் மற்றும் வர்ணமிடுதலும் தயாரித்தலும், அத்தோடு பொறியியல் அளவையியல். குறிப்பு.- உரு பெரிதாக்கி வரைதல், சிறிதாக்கி வரைதல், பல்வேறு வித மண் மாதிரிகளுக்கிணங்க புவியியல் சார் திட்டப்படங்களை வரைதல் மற்றும் வழங்கப்பட்ட அறிக்கைக்கிணங்க வரைபடம் (graph) வரைதல்.<br><br>* கணினியூடாக மென்பொருளை (Software) ஐ உபயோகித்து மண் பட வரைபினைத் தயாரித்தல் |
| 6. | நீரியல் உதவியாளர்கள் (Hydrologic Assistant) | இலங்கையில் நாடு பூராகவும் உள்ள நீர் நதிப்படுகை மற்றும் நீர்த்தேக்கத்தை அண்டிய பிரதேசங்களை இணைத்து அடிப்படை நீரியல் மற்றும் காலநிலைத் தரவுகள், விஞ்ஞான ரீதியிலான செயற்பாட்டினை உபயோகித்து நீரின் விஞ்ஞான பூர்வமான அவசியத்திற்காக தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், கணினியை உபயோகித்து பகுப்பாய்வு செய்தல், நாளாந்த, மாதாந்த, வருடாந்த மற்றும் நீண்ட காலத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பராமரித்தல், பொது மக்களுக்கு மற்றும் உரிய நிறுவனங்களுக்காக இத்தகவல்களைத் தயாரித்தல். |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| | | * சேகரிக்கப்பட்ட நீரியல் மற்றும் காலநிலை தரவுகளை முறையாகப் பாதுகாத்தல், தரத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட தரவு வங்கி (Data Bank) முறையைத் தொடர்ந்து பேணுதல்.<br><br>* நதிகளில் வெள்ள மட்டம் உயர்வதை நிர்ணயிப்பதற்குத் தேவையான தரவுகளைப் பெற்று கணினி மயப்படுத்தல் மற்றும் புதிய கணித மாதிரிகளை உபயோகித்து வெள்ளத்திற்கு உட்படக்கூடிய பிரதேசங்களை ஆய்வு செய்தல்.<br><br>* வெளிக்கள பரிசீலனையூடாக வெள்ளப்பாதிப்பு மட்டம் மற்றும் இப்பாதிப்புகளுக்கு உட்படும் பிரதேசங்களை அளவீடு செய்தல்.<br><br>* இப்பிரதான ஆறுகளில் அவ்வாறான வெள்ளம் ஏற்படக்கூடிய அல்லது அதற்கு அண்மிக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அத்தரவுகளை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளல், அதற்கிணங்க எச்சரிக்கை விடுத்தல். |
| 7. | நீரியல் வெளிக்கள உதவி யாளர்கள் (Hydrology Field Assistant) | நீரியல் பிரிவினூடாக தெரிவுசெய்யப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக் காக நீரியல் வெளிக்கள அளவீட்டுப் பிரிவுகளை நடாத்திச் செல்லல் மற்றும் அவசியப்படும் காலநிலைத் தரவுகள், மழை வீழ்ச்சி, நதிகளில் பாய்ந்தோடும் நீர் மட்டம் மற்றும் அண்மையிலுள்ள குளங்களின் நீர்க்கொள்ளளவில் மாற்றம் ஆகியன பற்றிய தரவுகளைச் சேகரித்தல் :<br><br>* அவ்வாறு பெற்றுக்கொண்ட அனைத்து நீரியல் மற்றும் காலநிலைத் தரவுகளைப் பரீட்சித்து அட்டவணைப்படுத்துவதற்காக மாத இறுதியில் பிரதான அலுவலகத்திற்கு ஒப்படைத்தல்.<br><br>* நதிகளிலும் கிளை நதிகளிலும் அத்தகைய நீர் மட்டம் காணப்படும்போது வெளியேற்றப்படும் நீரின் கொள்ளளவை அளவீடு செய்தல்.<br><br>வெள்ள அபாயம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் அல்லது அதற்கு அண்மிய சந்தர்ப்பத்தில் அதற்காக எச்சரிக்கை விடுப்பதற்கு அவசியப்படும் வெளிக்கள தரவுகளை நாளாந்தம் பிரதான அலுவலகத்திற்கு தெரிவித்தல், பிரதான வெள்ள நிலையின்போது அந்நேரத்திலிருந்து வெள்ள மட்டம் வேறுபடுவதைக் குறித்தல். |
| 8. | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப் பொருள்) [Research Assistant (Engineering materials)] | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணிப்ப தற்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களின் பொருத்தப்பாடு பற்றி வழங்கப்படும் நிர்மாணங்களுக்கு இணங்க பரிசீலனை நடவ டிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் பரிசீலனைக் காரணிகளை அடிப்படை யாகக் கொண்டு தரத்தினை உறுதிப்படுத்தல், அத்துறையில் பொறியியல் மூலப்பொருளுக்காக தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு (மண் மற்றும் கொங்கிரீட் பொருட்களின் தன்மை மற்றும் பலம் பற்றிய) சேவையின் அவசியத்தின் அடிப்படையில் ஈடுபடுதல்.<br><br>அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் கோரிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்வதில் ஈடுபடல் மற்றும் தரச்சான்றிதழ் வழங்குதல். |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| 9. | மண் வள ஆய்வாளர் (Soil Surveyor) | (1) தற்போது இடம்பெற்று வரும் மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத் தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நீர்ப்பாசன மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்படும் மண் ஆய்வானது காணிப் பாவனை நடவடிக்கைகளுக்கு அவசியப்படும் வெளிக்களத் தரவுகள் மற்றும் ஏனைய தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சர்வதேச தரத்திற்கு இணங்க ஒவ்வொரு வகைகளையும் தரப்படுத்தல்.<br><br>(2) மண் அமைப்புமுறைக் காரணி.- (காலநிலை, பௌதீக தோற்றம் மற்றும் பூகோளவியலில் மாற்றம்) என்பவற்றைக் கவனத்திற்கொண்டு அத்தகைய மண் வகுதிகள் அல்லது தரத்தின் அமைவு என்பவற்றைத் தீர்மானித்தல்.<br><br>(3) சர்வதேச தரத்திற்கு இணங்க விபரங்களடங்கிய குறிப்பி னைத் தயாரிப்பதற்காக அவசியப்படும் வகையில் மண் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல், அத்தகைய மண் மாதிரிகளைப் பகுப்பாய்வுக்காக ஆய்வுகூடத்தில் கையளித்தல், அந்த பகுப்பாய்வுத் தரவு மற்றும் வெளிக்கள பகுப்பாய்வுத் தரவுகளை அடிப்படையாக வைத்து இறுதி மண் தரவுகளில் சரியானதை உறுதிப்படுத்திக்கொள்ளல் மற்றும் அதற்கேற்ப soil key என்பவற்றைத் தயாரித்தல்.<br><br>(4) உரிய பிரதேசத்தில் வான் நிழற்பட (Aerial photograph) உபயோகித்து வான் நிழற்பட ஆய்வினை மேற்கொள்ளல்.<br><br>(5) தரவுகள் அவசியப்படும் தீவிரத் தன்மைக்கு இணங்க மண் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெளிக்களத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் மண்ணின் தன்மைக்கு இணங்க மண்ணின் வகைகளை இனங்காணுதல்.<br><br>(6) வெளிக்களத்தில் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகளுக்கிணங்க (Draft Soil Map) தயாரிப்பதோடு Pentograph இயந்திரத்தினூடாக தேவையான அளவில் தயாரித்தல்.<br><br>(7) வெளிக்களத்தில் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகள் மற்றும் இணையத்தை உபயோகித்து காணி உபயோக வரைபடத்தைத் தயாரித்தல்.<br><br>(8) G. P. S. (Global Position System) உபயோகித்து தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்.<br><br>(9) மண்ணில் நீர் கடத்தும் திறன் பற்றிய தரவுகளைப் பெற்றுக் கொள்ளல்.<br><br>(10) வெளிக்களத்தில் வெளிக்கள ஊழியர்கள், காவலாளிகள் மற்றும் சாரதிகள் போன்றோரின் நிர்வாக நடவடிக்கைகள் (மேற்பார்வை) செய்தல் மற்றும் அவர்களின் நிதி விடயங்களை நேரடியாக மேற்கொள்ளல். |
| 10. | ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு) [Research Assitant (Hydraulic lab)] | நீர்வலுப் பிரிவு பொறியியலாளர்களின் நடவடிக்கைகளுக்கு உதவுதல், நீர்வலுப் பிரிவுக்கு உரிய நிர்மாண வேலைகளில் அனைத்துத் துறைகளி லும் காணப்படும் உபகரணங்கள், மூலப் |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| | | பொருட்கள். தொழிலாளர் பரிபாலனம், நீர்வலு மாதிரி செயற்பாடு, கட்டிடம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் பரிபாலனம், நீர்வலுப் பிரிவுக்குரிய நிர்மாண வேலைக்கான மதிப்பீடு என்பவற்றைத் தயாரித்தல், திணைக்களத்திற்குரிய அனைத்து இயந்திரவியல் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களைத் திருத்துதல் சம்பந்தமாக அவ்வுபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு உரிய தர அறிக்கையினைத் தயாரித்தல். |
| 11. | இயந்திரவியல் மேற்பார்வையாளர் (Mechanical Foreman) | சிற்றூழியர்களை நிர்வகிக்கும்போது மற்றும் வாகனங்கள், இயந்திரங்கள் ஆகியனவற்றுக்கான பற்றுச்சீட்டுக்களைத் தயாரிக்கும்போது இயந்திரவியல் பொருளியலாளருக்கு உதவுதல், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு (இயந்திரவியல்) அல்லது வேலை எழுதுனருடன் வேலையை ஆரம்பித்தல், களஞ்சியப் பொறுப்பாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் பழுதுபார்த்தலுக்காக கொண்டுவரப்படும் விடயங்களை பொறுப்பேற்றல், பழுதுபார்த்தலுக்குத் தேவைப்படும் உதிரிப்பாகங்கள், ஆயுதங்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல், களஞ்சியசாலைப் புத்தகத்தைப் பரிபாலித்தல், மதிப்பீட்டு நடவடிக்கையின்போது இயந்திரவியல் பொறியியலாளருக்கு உதவுதல், பழுதுபார்க்கப்பட்ட பின்னர் முறையாக அவற்றைக் கையளித்தல் மற்றும் உடைந்த உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்களை மீள களஞ்சியசாலைக்கு ஒப்படைத்தல், செய்யப்பட்ட பழுதுபார்த்தல்களை லொக் புத்தகத்தில் பதிதல், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு (இயந்திரவியல்) அல்லது வேலை எழுதுனருடன் இணைந்து பற்றுச்சீட்டுக்கள் தயாரித்தல், பாவிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள், எரிபொருள், உராய்வு எண்ணெய் மற்றும் ஏனைய விடயங்களுக்காக மூலப்பொருள் அறிக்கையினைத் தயாரித்தல்.<br><br>பழுதுபார்த்தலுக்காக இயந்திரவியல் தளத்திற்கு கொண்டுவரப்படும் இயந்திரங்கள், வாகனங்கள் களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து இயந்திரவியல் தளத்திலிருந்து பொறுப்பேற்று பழுதுபார்த்தல் முடிவடைந்தவுடன் மீண்டும் களஞ்சியப் பொறுப்பாளருக்குக் கையளித்தல். |

2. **ஆட்சேர்க்கும் முறை :**

2.1 நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும் எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிடத்தின் தொகைக்குச் சமமான விண்ணப்பதாரர்களின் தொகையில் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களில் மொத்தப் புள்ளிகளின் திறமைகளுக்கு இணங்க சாதாரண நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

2.2 சாதாரண நேர்முகப் பரீட்சையானது விண்ணப்பதாரர்களின் உடல் ரீதியான தகுதியையும் மற்றும் சான்றுப்பத்திரங்கள் பரிசீலித்துப் பார்க்கப்படுவதோடு அதற்காகப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- பயிற்சியளிக்கும் திட்டம்.- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இற்கிணங்க 2017.01.01 ஆந் திகதிக்கு முதலாம் வருட பயிற்சிக்காக மாதாந்தக் கொடுப்பனவு ரூ. 18,728 மற்றும் ரூ. 7,110 கொடுப்பனவும் உரியதாகும்.

**III ஆம் தரம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இன் உப பிரிவு 1 இற்கிணங்க பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூ. 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூ. 57,550 (MN 3-2016) ஆகும். அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இற்கிணங்க 2017.01.01 ஆந் திகதியிலிருந்து அடிப்படைச் சம்பளமான ரூ. 21,419 மற்றும் ரூ. 6,587 கொடுப்பனவு உரியதாகும்.

*4.* **சேவைப் பிரிவுகள்.**- மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப/ மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப விசேட தரம் (Supra Class)

*4.1* ***தரம்.***- III ஆம் தரம்
II ஆம் தரம்
I ஆம் தரம்
விசேட தரம்

*4.2* ***பதவியின் தன்மை.***- நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது.

5. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

5.1 பயிற்சியளித்தல் திட்டத்திற்கு உள்ளெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய பயிற்சிக் காலத்திற்குள் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த பின்னர் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும்.

5.2 பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு 6 மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு தனது பயிற்சிக் காலத்தை நீடித்துக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படும். அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் பின்னர் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

5.3 III ஆம் தரத்தின் நியமனம் 3 வருடங்களுக்குத் தகுதிகூர் காலத்திற்குட்பட்டதாகும். III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 3 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.4 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 இற்கிணங்க பதவியில் இணைந்து 5 வருடத்திற்குள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி பற்றிய உரிய திறனைப் பெறுதல் வேண்டும்.

5.5 அரச சேவை ஆணைக்குழுவின் சேவைத்திட்டத்தின் ஒழுங்குகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் தாபன விதிக்கோவைகளுக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

5.6 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தீவின் கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள நீர்ப்பாசனத் துறையின் வேலைத்தளங்களில் சேவையாற்றுவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.

6. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் தினைத்திற்கு வயது 18 இற்குக் குறையாமலும் 30 இற்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.

7. **தேவையான தகைமைகள் :**

*7.1* ***கல்வித் தகைமைகள் :***

(அ) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏதாவது ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

(ஆ) பட வரைஞர், துளையிடல் உதவியாளர்கள், சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர், மண் படவரைவியலாளர், நீரியல் உதவியாளர்கள், நீரியல் வெளிக்கள உதவியாளர்கள், ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்), ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர் வலு), இயந்திரவியல் மேற்பார்வையாளர்கள் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சையில் பிரயோக கணிதம்/ தூய கணிதம்/இணைந்த கணிதம் மற்றும் பௌதிக விஞ்ஞான பாடம் உட்பட மூன்று (3) விஞ்ஞானப் பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

(இ) மண் வள ஆய்வாளர்/ ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) பதவிகளுக்காக.- கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) ப் பரீட்சையில் இரசாயனவியல், பௌதிக விஞ்ஞான பாடம் உட்பட ஏதாவது ஒரு விஞ்ஞான அல்லது கணித பாடத்துடன் மூன்று (3) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

7.2 ***தொழில்சார் தகைமைகள்.***- படவரைஞர் பதவி மற்றும் இயந்திரவியல் மேற்பார்வையாளர் பதவிக்காக மேலே 6.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்படும் தொழில்சார் தகைமைகளும் இருத்தல் வேண்டும் :

*வடவரைஞர்.*- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் படவரைஞருக்கான ஒரு வருட முழு நேர பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததற்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.

*இயந்திரவியல் மேற்பார்வையாளர் :*

(i) மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி கல்லூரி மூலம் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் உயர் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(v) இலங்கைப் பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் 1 ஆவது பகுதியைப் பூர்த்திசெய்திருத்தல் ;

அல்லது

(vi) தொழில் துறைக்குரிய தேசிய தொழில் தகைமை (NVQ) 6 ஆம் மட்டத்தின் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் ;

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனங்களினால் விசாரித்து கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதோடு மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்நுட்பச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்.

7.3 ***பௌதிக தகைமைகள்.***- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7.4 ***ஏனைய தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) மதப் போதகர் எவரும் இப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகைமைப் பெற்றவர்கள் அல்ல.
(iv) சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது, விண்ணப்பதாரர் உரிய அனைத்து தகைமைகள் மற்றும் குறிப்பிட்ட வயதெல்லை, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்.

8. உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் அது பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் உங்களது விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும். ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் அதற்கு உரிய நடவடிக்கைகளுக்கு கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

9. **பரீட்சையின் செயல்முறை :**

9.1 ***பரீட்சைக்கான பாடப்பரப்பு :***

(1) *நுண்ணறிவுப் பரீட்சை :*

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான மற்றும் தீர்மானித்தல் ரீதியான சிந்தனை மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை. |

(2) *பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை :*

* படவரைஞர் பதவிக்காக :

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | கொடுக்கப்படும் கட்டமைப்பின் அளவு மற்றும் தரமான நிர்மாணித்தலுக்கான மூலப்பொருட்களின் தன்மை பற்றிய அறிவைப் பரீட்சித்தல் மற்றும் படவரைதலின் மூலத் தத்துவத்தைப் பாவித்து கொடுக்கப்படும் குறிப்பிற்கிணங்க வரைபடத்தினை வரைதல். |

* சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர்/ துளையிடல் உதவியாளர்கள்/ ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்)/ ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு)/ மண் படவரைவியலாளர் பதவிகளுக்காக

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | அல்ஜிப்ரா, கேத்திர கணிதம், திரிகோண கணிதம், திரவம், திரவத்தின் பௌதிக நிலை, திரவத்தின் அமுக்த சமநிலை (hydrostatics) அளவீடு, தேசப்படங்களை வாசித்தல் மற்றும் விஞ்ஞான ரீதியான கணக்கீடு என்பவற்றின் அறிவினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் அமையப்பெறும். |

* மண் வள ஆய்வாளர்/ ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) பதவிகளுக்காக :

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | பகுதி I (பௌதிகவியல்)<br>(அ) ஒளியியல்<br>(ஆ) வெப்பம்<br>(இ) இயந்திரவியல்<br>(ஈ) மின்சாரம் மற்றும் காந்த சக்தி<br><br>பகுதி II (இரசாயனவியல்)<br>(அ) இயற்கை (சேதன) இரசாயனவியல் (Organic Chemistry)<br>(ஆ) அளவு மற்றும் தரம் பற்றிய பகுப்பாய்வு<br>(இ) செயற்கை இரசாயனவியல் (Inorganic Chemistry)<br>(ஈ) பொது இரசாயனவியல் |

* நீரியல் வெளிக்கள உதவியாளர்கள்/ நீரியல் உதவியாளர்கள் பதவிகளுக்காக :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | (இணைந்த கேத்திர கணிதம் (Coordinate geometry), இயக்க விதிகள் (Dynamics) புள்ளிவிபரவியல், திரிகோண கணிதம், திரவத்தின் அமுத்த சமநிலை (hydrostatics), இயந்திரவியல், ஒளியியல் (optics), வெப்பம், ஈரப்பதன், மின்சாரம் மற்றும் இலத்திரனியவியல் ஆகிய பாடங்கள் பற்றி விண்ணப்பதாரரின் அறிவைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். |

* இயந்திரவியல் மேற்பார்வையாளர் பதவிக்காக :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | வரைதல் மூலத் தத்துவத்தை உபயோகித்துக் கொடுக்கப்படும் உருவத்திற் கமைய இயந்திரத்தின் அல்லது ஒரு பகுதியின் குறுக்கு வெட்டு முகத்தின் முன் அல்லது பின்புற தோற்றத்தை வரைதல் மற்றும் பௌதிக விஞ்ஞானம், இயந்திரவியல் விஞ்ஞானம் மற்றும் பிரயோக கணிதம் ஆகிய பாடங்கள் பற்றி விண்ணப்பதாரரின் அறிவைப் பரீட்சிப்பதற்காக வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். |

9.2 இப்பரீட்சை 2017, சித்திரை மாதத்தில் கொழும்பு நகருக்குள் மாத்திரம் நடாத்தப்படும். இப்பரீட்சையைப் பிற்போடுதல் அல்லது இரத்துச்செய்தல் பற்றிய இறுதித் தீர்மானம் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

10. **விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்** :

10.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கிணங்க 21 செ. மீ. × 19 செ. மீ. (A4) அளவிலான கடதாசியை இரு பக்கங்களையும் உபயோகித்து உரியவரால் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 6 வரையான தலைப்புகள் 1 ஆம் பக்கத்திலும் இலக்கம் 7 தொடக்கம் 11 வரை 2 ஆம் பக்கத்திலும் இலக்கம் 12 தொடக்கம் 15 வரை 3 ஆம் பக்கத்திலும் இலக்கம் 16, 4 ஆம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படல் வேண்டும்.

10.2 தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களைத் தனது திணைக்களத் தலைவரினூடாகவும் அரச கூட்டுத்தாபன மாகாண சபைகளில் சேவையாற்றுபவர்கள் தமது நிறுவனத் தலைவரினூடாகவும் குறிப்பிட்ட தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

10.3 விண்ணப்பங்கள், தான் பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

10.4 குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவாறு அமையாத மற்றும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

10.5 விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எவ்வித முறைப்பாடுகளும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

10.6 போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்குவதானது விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

10.7 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் .................................................... பதவிக்கு ஆட்சேர்த்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுக.

10.8 விண்ணப்பப்பத்திரத்தில் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படை அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அல்லது பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 ஆம் தரத்திற்குரிய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்ட மாகாண அல்லது அரசாங்க சேவையிலுள்ள நிரந்தரப் பதவியையுடையவர்கள் போன்றவர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10.9 இந்த வெற்றிடத்தை நிரப்புதல், நிரப்பாதிருத்தல் அல்லது வெற்றிடத்தில் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் இறுதித் தீர்மானம் எடுப்பது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்குரியதாகும்.

11. விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல்.- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2017, மாசி மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழே காணப்படும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
இலக்கம் 230, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 7.

12. பரீட்சைக்குத் தோற்றுதல்.- விண்ணப்பதாரர் பரீட்சை நிலையத்தில் பரீட்சை நிலைய உத்தியோகத்தரிடம் தனது அனுமதி அட்டையைக் கையளிக்க வேண்டும். தனது அனுமதி அட்டையைக் கையளிக்காத விண்ணப்பதாரர் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். விண்ணப்பதாரர் தனக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13. விண்ணப்பதாரரின் ஆளடையாளம்.- பரீட்சை நிலையத்தில் தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் சம்பந்தமாகவும் பரீட்சை நிலைய உத்தியோகத்தர் திருப்தியடையக்கூடியவாறு விண்ணப்பதாரர் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்படும் ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலானது தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் காணப்படுவதோடு ஏதேனும் தெளிவின்மை காணப்பட்டால் சிங்கள மொழியிலுள்ள அறிவித்தலே செல்லுபடியானதாகக் கருதப்படும்.

**பொறியியலாளர் எஸ். எஸ். எல். வீரசிங்க,**
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7,
2017, தை 9.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

☐
(அலுவலக உபயோகத்திற்கு)

1. விண்ணப்பிக்கும் மொழி மூலம் :

சிங்களம் - 1
தமிழ் - 2
☐
(உரிய கூட்டிற்குள் இலக்கத்தை இடவும்)

2. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :----.
(ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

3. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) :-

சிங்களத்தில்/ தமிழில் :----.

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : PERERA, A. B. C.)

3.1 முழுப்பெயர் :-

சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | |

5. ஆண்/ பெண் :

ஆண் - M
பெண் - F

(உரிய கூட்டிற்குள் எழுதவும்)

6. நிரந்தர முகவரி :-

சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

6.1 அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி :

சிங்களத்தில்/ தமிழில் :----.

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

7. தொலைபேசி இலக்கம் :

நிலையான தொலைபேசி :----.

கையடக்கத் தொலைபேசி :----.

8. வதிவிடம் :

8.1 வதிவிட மாவட்டம் :----.

8.2 பிரதேச செயலாளர் பிரிவு :----.

9. குடியியல் நிலை :

திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2

(உரிய கூட்டிற்குள் இலக்கத்தை எழுதவும்)

10. பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

10.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று வயது (2017.02.28 இல்) :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

11. கல்வித் தகைமைகள் :

11.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.

(ii) சுட்டெண் :----.

(iii) பெறுபேறு :----.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

11.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரம் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.

(ii) சுட்டெண் :----.

(iii) பெறுபேறு :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

12. தொழில்சார் தகைமைகள் :

| மேற்கொண்டுள்ள கற்கைநெறி | வழங்கிய நிறுவனம் | கற்கைநெறிக்கான கால எல்லை | சான்றிதழின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|
| | | | |

13. நீர் ஏதாவது ஒரு குற்றத்திற்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் கருதப்பட்டுள்ளீரா ? :----.

(உரிய கூட்டினுள் (x) அடையாளம் இடவும்)

ஆம் ☐ இல்லை ☐

13.1 ஆம் எனின், விபரத்தைக் குறிப்பிடுக :----.

14. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) .................................................. ஆகிய நான், இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானதும் உண்மையானதும் என உறுதி கூறுகிறேன். நான் அரச சேவையில் இருந்து வெளியேற்றப்பட்ட அல்லது செயற்திறமையற்றவர் என்ற வகையில் சேவையிலிருந்து இளைப்பாறச் செய்யப்பட்டவர் அல்ல எனவும், பதவியை விட்டுச்சென்றவர் எனக் கருதப்படுபவரும் அல்ல என உறுதி கூறுகின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஏதாவது பொய்யானதாக அல்லது தவறானதாக நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்ட ஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் நாட்டின் எப்பிரதேசத்திலும் நீர்ப்பாசனத் துறையின் வேலைத்தளங்களில் சேவையாற்றவும் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................. என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்தவர் எனவும், அவர் ............................................. ஆந் திகதி எனது முன்னிலையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 14 ஆம் பிரிவின்கீழ் கையொப்பமிட்டார் எனவும் உறுதியளிக்கின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரை இடவும்) :----.
திகதி :----.

16. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டும்.)

திரு./ திருமதி/ செல்வி .................................................. என்பவர் ..................................................... சேவையிலுள்ள ........................................................... பதவியை வகிக்கின்றார் எனவும், அவர் மேலே சமர்ப்பித்துள்ள தகவல்கள் சரியானது எனவும் உறுதியளிக்கின்றேன். இப்பதவிக்காக இவர் தெரிவுசெய்யப்பட்டால் ................................... ................ சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் மேலும் தெரிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் அலுவலக முத்திரை.

திகதி :----.

1-851

---

## மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

வனப் பாதுகாப்புத் திணைக்களம்

### வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வன விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வன விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும்போது 2015.05.15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக விண்ணப்பங்கள் அனுப்பி வைத்த பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெறுகின்றனர் என்பதுடன் அவர்கள் மீண்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டியது அவசியமற்றதாகும்.

1. **சம்பள அளவுத் திட்டம்**.- பயிலுநர் தரம் MN 1-2016 பொ.நி.சு. 03/2016 அமைவாக
ரூ. 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - ரூபா 45,540 ஆகும்.

2. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்** :-

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையைச் செலுத்துதல் வேண்டும் ;

(ii) இந்த நியமனம் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் ;

(iii) வன விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் திணைக் களத்தின் ஊடாக பிரதேச மட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படுகின்ற பல்வேறுபட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மக்கள் பங்களிப்புடன் வினைத்திறனுடனும் திருப்திகர மானதுமாக நடாத்திச் செல்லல் வேண்டும் ;

(iv) வன விரிவாக்கல் உத்தியோகத்தர்களின் சேவை நிலையங்கள் நாட்டின் காட்டுப் பகுதிகளிலுள்ள கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ளதுடன் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பிரதேசத்திலும் எந்தவொரு நிலைமையிலும் பணிக்கப்படும் பிரகாரம் பணியாற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும் ;

(v) வர்த்தமானி அறிவித்தலில் 2 ஆவது பந்தியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவிகளுக்கு நியமிக்கும்போது இயைபுள்ள பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

(vi) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

3. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- சகல விண்ணப்ப தாரிகளும் பின்வரும் தகைமைகளைத் திருப்திகரமானவாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (சா. த.) தரப் பரீட்சையில் ஒரே தடவையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ii) க. பொ. த. (உ. த.) தரப் பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு (1) பாடத்தில் (வழமையான பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(iii) தொழில்சார் தகைமைகள்.- மேற்குறிப்பிட்ட துறையில் பெற்ற தகைமைகள் சிறப்புத் தகைமைகளாகக் கொள்ளப்படும் ;

(iv) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருப்பதுடன் நல்லொழுக்கமுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(v) எல்லாப் பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதே சத்திலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான உடல், உள ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்புத் திட்டம்**.- (i) மேலே 4 ஆம் பந்தியின்கீழ் தகுதி பெறுகின்ற விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளுகின்ற புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் மீது ஆட்சேர்ப்புச் செய்வதற்குள்ள எண்ணிக்கை மற்றும் அவ்வாறு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கையில் 25% எண்ணிக்கை கொண்ட விண்ணப்பதாரிகள் கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையிலும் எழுத்துமூலப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கு முறையின் மீது நிலவுகின்ற/உள்ள வெற்றிட எண்ணிக்கைக்கு நேரொத்ததாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(ii) கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்குப் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும் :

| பரிசீலனை செய்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| 2. தொழில்சார் தகைமைகள் | 30 |
| 3. கணினி ஆற்றல் | 15 |
| 4. மொழித்தேர்ச்சி | 20 |
| 5. நேர்முகப் பரீட்சையில் காட்டுகின்ற திறமை | 05 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

(iii) மேலே 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆட்சேர்ப்புச் செய்யவுள்ள/நிலவுகின்ற இறுதி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும்போது சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் சிலர் இருப்பின் பந்தி 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அப்புள்ளியைவிட அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் மட்டும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர் ;

(iv) எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கு முறையின் மீது நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு நேரொத்ததாக தயாரிக்கப்பட்ட பெறுபேற்றினைக் கொண்ட அட்டவணை ஒன்று காடு பேணுநர் தலைமையதிபதிக்கு வழங்கப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk இணையத் தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

(v) மேலே 5.1 இன் கீழ் தகுதி பெற்று தெரிவு செய்யப் படுகின்ற விண்ணப்பதாரிகள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து 5 வருட காலப்பகுதிக்குள் நுவரெலியாவில் அமைந்துள்ள இலங்கை வனக் கல்லூரியினால் நடாத்தப்படு கின்ற ஒரு வருட எழுத்துமூல மற்றும் செயல்முறைப் பயிற்சி யின் பின்னர் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(vi) திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப் படுகின்ற விண்ணப்பதாரிகள் மூன்று வருடத்துக்குள் மரங்களை இனங்காணும் பரிசோதனையில் (மத்திய தரம்) சித்தியடைந்ததன் பின்னர் மூன்று (3) வருட திருப்திகரமான சேவைக்காலத்தின் பின்னர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவர்.

6. **பாடவிதானம்**.- எழுத்துமூல பரீட்சை, இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும் :

உளச்சார்பு (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
எழுத்துமூலப் பரீட்சை வினாத்தாள் விடயம் சம்பந்தமான எண் ரீதியான, தர்க்க ரீதியான திறனையும் விவேகத்தையும் பகுப்பாய்வையும் தீர்மானிக்கும் வகையில் வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். வினாத்தாள் ஐம்பது (50)

பல்வகை தேர்வு வினாக்களைக் கொண்டதாகவும் சுருக்க விடைகளைத் தெரிவிக்கும் வினாக்களைக் கொண்டதாகவும் அமையும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தலும் வேண்டும்.

பொது வினாத்தாள் (*காலம்* : 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

வனப் பாதுகாப்பு, தொடர்பாடல் முறைகள், வன விரிவாக்கல் நடவடிக்கைகள், நாற்று மேடை முகாமைத்துவம், வனத் தோட்டம் மற்றும் சமூக ஒத்துழைப்புடனான அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் விண்ணப்பதாரிகளுக்கு உள்ள அறிவு மற்றும் ஆற்றலை அளவிடுவதற்கான வினாக்களைக் கொண்ட ஒரு வினாத்தாளாகக் காணப்படும்.

விண்ணப்பதாரிகள் இந்த இரண்டு (2) வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் தோற்றுதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பங்களும் ஏனைய விபரங்களும்** :

(i) இந்த விளம்பரத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப விண்ணப்பப்படிவத்தின் 1 தொடக்கம் 8 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் மீதி அடுத்த பக்கத்திலும் உள்ளடக்கியவாறு 21 x 29 செ. மீ. (ஏ4 அளவு) கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகித்து உரியவரால் விண்ணப்பப்படிவங்கள் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவம் பரீட்சையில் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தில் தமது கையெழுத்தினாலேயே பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தையிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வன விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சை - 2016(2017)" எனக் குறிப்பிட்டு 2017.02.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் (தனிப்பட்ட பெயருக்கு அல்லது வேறேதேனும் முகவரிக்கு அனுப்புதலாகாது) ;

(ii) பூர்த்திசெய்யப்படாத அல்லது தாமதமாகக் கிடைக்கின்ற விண்ணப்பப் பத்திரங்கள் அறிவிக்காமலே நிராகரிக்கப்படும் ;

(iii) அஞ்சலில் தொலைந்துபோகும் விண்ணப்பப் பத்திரங்கள் தொடர்பில் ஏதுவும் பொறுப்பேற்கப்பட மாட்டாது ;

(iv) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனமொன்றின் ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினாலும், அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர், ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், 2,40,360 ரூபா அல்லது அதற்குக் கூடுதலான வருடாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கின்ற பதவிநிலை உத்தியோகாத்தர் ஒருவரால் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதியினால் அல்லது தலைமை பிக்குவினால் அல்லது பிற மதங்களின் மத ஸ்தாபனங்களுக்கு பொறுப்பாகவுள்ள மதத் தலைவர்களாக கருதக்கூடிய நிலையிலுள்ள ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(v) இந்த விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள நியதிகளுக்கு ஏற்புடையதாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும் ;

(vi) ஏற்கனவே அரசாங்க சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களது நிறுவனத்தின்/திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும் ;

(vii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

8. **பரீட்சைக் கட்டணங்கள்** :

(i) பரீட்சைக் கட்டணம் 600 ரூபா ஆகும். இந்தக் கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்தில் வரவு வைத்து 2017.02.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நாட்டிலுள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் அல்லது உப அஞ்சல் அலுவலகத்திலும் மேற்குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட உரிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும் (இந்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரி வைத்துக்கொள்ளல் பொருத்தமானதாகும்). பரீட்சைக் கட்டணம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும் ;

(ii) எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றுவதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

9. **பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கோரப்படுமிடத்து சமர்ப்பித்தல் வேண்டும் :-**

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ii) கல்விச் சான்றிதழ் ;

(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலர் சான்றிதழ் (பிரதேச செயலாளரின் மேலொப்பத் துடன்) ;

(iv) நற்சான்றிதழ்கள் இரண்டு ;

(v) உரிய பிற சான்றிதழ்கள்.

**கவனிக்க வேண்டியது**.- ஆவணங்கள்/ சான்றிதழ்கள் அல்லது இவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

10. **பரீட்சை நிலையங்களும் அனுமதி அட்டைகளும் :**

(i) பரீட்சையானது இந்த அட்டவணையில் காட்டப் பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற நகரம், அதற்குரித்தான இலக்கம் விண்ணப்பத்தின் உரிய தலைப்பில் முதலாவது மற்றும் இரண்டாவது தெரிவுகளாகக் குறிப்பிடல் வேண்டும். ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு விண்ணப்பதாரிகள் போதுமானளவு விண்ணப்பிக்காதவிடத்து இந்த விண்ணப்பதாரிகள் அவர்களது இரண்டாவது விருப்பாகக் காட்டியுள்ள நகரில் அல்லது அண்மையிலுள்ள வேறு நகரில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையத்துடன் தொடர்புபடுத்தப்படுவர். அத்துடன் உத்தேச எல்லா நகரங்களிலும் மேலதிகமாக அல்லது பரீட்சை நிலையத்தைத் தாபிப்பதற்குப் போதுமான அளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ii) விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியான 2017.02.28 அன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் செம்மையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் இதுபற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 2 அல்லது 3 தினங்கள் கடந்த பின்னரும் தங்களது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவில் வினவ வேண்டும். இவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்றவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு அப்பால் வசிப்பவராயின் இந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றைத் துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரிகள் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்தின் ஊடாக கோருதல் மிக்க பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு கோரும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோருகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு தன்னிடம் வைத்திருந்த விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்யும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் ஆயத்தமாக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும் ;

(iii) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையை விநியோகித்தல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளாரென ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது என்பதுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் தினத்திலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதி களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இந்த ஒழுங்குவிதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் தண்டனைக்கும் அவர் ஆளாகுதல் வேண்டும்.

11. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்**.- பரீட்சை நிலைய பரிசோதகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் என்பதுடன்

இதற்காகப் பின்வரும் ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

12. **போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்.**- தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அல்லது தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் உரிய தகைமைகள் பூர்த்திசெய்யப்படவில்லை எனத் தெரியவருமிடத்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும் என்பதுடன், பரீட்சார்த்தி அளித்துள்ள எவையேனும் விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டியவரையில் பொய்யானவையென்றும் அல்லது எவையேனும் முக்கிய விபரங்களை வேண்டுமென்றே மாற்றியுள்ளாரென அவர் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து பணிநீக்கத்திற்கு உட்படுவார்.

13. தேவையான சந்தர்ப்பங்களில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் காடு பேணுநர் தலைமை அதிபதியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது ஏற்புடையதாகாமை உள்ளமை பற்றி தெரிய வருமிடத்து இவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

காடு பேணுநர் தலைமை அதிபதி.

வனப் பாதுகாப்புத் திணைக்களம்,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2017, சனவரி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வனப் பாதுகாப்பு திணைக்களம்**

வன விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)

Open Competitive Examination for Recruitment to the Post of Forest Extension Officer of the Forest Department - 2016 (2017)

பரீட்சைக்குத் தோற்றுகின்ற நகரம் :

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதல் தெரிவு | | |
| இரண்டாம் தெரிவு | | |

(அட்டவணை 1 இற்கமைவாகப் பூர்த்தி செய்யவும்.)

1. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

2. (i) முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(உ+ம் : Guanawardhana, M. G. B. S.K.)

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. (i) அனுமதி அட்டையை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

4. ஆணா/ பெண்ணா ?
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. (i) பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

(ii) 2017.02.28 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. பிரசாவுரிமை :
பரம்பரையாக - 1
பதிவின் மூலம் - 2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

8. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. கல்வித் தகைமைகள் :

(i) கல்வி பொதுத்தராதர (சா. த.) பரீட்சை :

முதலாம் தடவை இரண்டாம் தடவை

வருடம் : வருடம் :
சுட்டெண் : சுட்டெண் :

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ii) கல்வி பொதுத்தராதர (உ. த.) பரீட்சை :

வருடம் : சுட்டெண் :

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

10. வேறு கல்வித் தகைமைகள் :----.

11. தொழில்சார்/ வேறு தகைமைகள் :----.

12. (i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.

பற்றுச்சீட்டு கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

13. (i) தாங்களுக்கு எப்போதாவது எந்தவொரு குற்றச் சாட்டுக்காகவாவது நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா?

ஆம்/ இல்லை ☐

(ii) ஆம் எனின், விபரங்களைக் குறிப்பிடுக :----.

14. தாங்கள் தற்பொழுது தொழில் புரிபவராயின் அது தொடர்பான விபரங்கள் :

(i) நிறுவனம் :----.
(ii) முதல் நியமனத் திகதி :----.
(iii) பதவி :----.
(iv) சம்பளம் :----.

15. தங்களைப் பற்றிய தகவல்களை வழங்கக்கூடிய உறவினரல்லாத இருவரது பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக.

(i) :----.
(ii) :----.

16. **விண்ணப்பதாரியின் பிரகடனம் :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவை அல்லது தவறானவையென தெரிவுசெய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படுமெனவும் நியமனம் பெற்றதன் பின்னரும் இவ்வாறு தெரியவருமிடத்து நட்டஈடு இல்லாமலே பணி நீக்கம் செய்யப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும், பரீட்சை நடாத்துவதும் பெறுபேறுகளை வெளியிடுவதும் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

(கையொப்பத்தை உறுதிப்படுத்துபவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்,)

திகதி :----.

17. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்துதல் :**
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ................................ ஆகியவரை தனிப்பட்ட ரீதியில் நான் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் 2017,................................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், இதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
(பதவி இலச்சினை)
முகவரி :----.
திகதி :----.

18. **விண்ணப்பதாரி அரசாங்க ஊழியராயின் திணைக் களத் தலைவரினால் இந்தப் பகுதி பூர்த்திசெய்தல் வேண்டும் :**
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/செல்வி .................................. இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/அலுவலகத்தில் ..................................... ஆக நிரந்தர/தற்காலிக பதவியொன்றை வகிப்பவரெனவும் இவர் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து இந்தத்

திணைக்களத்தில் தற்பொழுது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்கலாம்/ விடுவிக்க முடியாது என இத்தால் தெரிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவர் அல்லது
அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----. (இலச்சினையை இடுக.)
திகதி :----.
(தேவையற்ற வசனங்களைக் கீறிவிடுக.)

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவத்துடன் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு/ ரசீது தவிர்ந்த வேறு ஏதும் ஆவணங்கள் அல்லது அதன் பிரதிகள் இணைக்கப்படலா காது.

**அட்டவணை**

பரீட்சை நிலையங்கள் தாபிக்கப்படுகின்ற நகரங்களும் நகர எண்களும்

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கொழும்பு | *01* |
| கம்பஹா | *02* |
| களுத்துறை | *03* |
| கண்டி | *04* |
| மாத்தளை | *05* |
| நுவரெலியா | *06* |
| காலி | *07* |
| மாத்தறை | *08* |
| அம்பாந்தோட்டை | *09* |
| யாழ்ப்பாணம் | *10* |
| மன்னார் | *11* |
| வவுனியா | *12* |
| முல்லைத்தீவு | *13* |
| கிளிநொச்சி | *14* |
| மட்டக்களப்பு | *15* |
| அம்பாறை | *16* |
| திருகோணமலை | *17* |
| குருநாகல் | *18* |
| புத்தளம் | *19* |
| அநுராதபுரம் | *20* |
| பொலன்நறுவை | *21* |
| பதுளை | *22* |
| மொனறாகலை | *23* |
| இரத்தினபுரி | *24* |
| கேகாலை | *25* |

*1-920*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.